BRAMPTON Service and Information Update

# கூடுதல் குடியிருப்பு வசதிகள் பற்றிய பொதுமக்கள் கருத்துக்களை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் வரவேற்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 20, 2021) – நகரவாசிகளுக்காக கட்டுபடியாகும் விலையில், வீட்டு வசதி கொடுப்பதற்கான யுக்தியாகிய ப்ராம்ப்ட்டன் வீட்டு வசதி (*Housing Brampton*), க்கு செவிசாய்க்கும் விதமாக, கூடுதல் குடியிருப்பு அலகுகள் (Additional Residential Units) (ARU) சம்பந்தமான கொள்கை பரிசீலனை பற்றிய சமுதாய உள்ளீட்டுக் கருத்துகளை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் வரவேற்கிறது; இது சந்தையினுள்ளாக புதிய வீட்டு வசதிகளை மிகவிரைவாகக் கொண்டுவர உதவும்.

*மாகாண நிர்வாகத்தின் மசோதா 108 மேலும் அதிக வீடுகள்* (Province's Bill 108 More Homes), *மேலும் அதிக தெரிவுகள் சட்டம்*, 2019 (More Choice Act, 2019), ஆகியவை ஏற்கெனவே இருக்கின்ற ஒன்ட்டேரியோவின் நில உபயோகம் திட்டமிடும் கட்டமைப்பினை உருமாற்றி அமைக்கின்றன; இதன்படி, தனித்தனியான கட்டுமானங்களில் கூடுதல் குடியிருப்பு அலகுகளை அமைக்க அனுமதிக்கும் வகையிலான கொள்கைகளை நகராட்சிகள் கைக்கொள்ள வேண்டும் எனக் கூறப்படுகிறது.

கூடுதல் குடியிருப்பு அலகுகள் பற்றிய கொள்கை உருவாக்கமானது நகருக்குள், மண்டலங்கள் அமைக்கும் தடைகளைக் குறைக்கிறது; அத்துடன் அதிக வீடுகள் வழங்குவதற்கு நிலைமைகளை உருவாக்கி, கட்டுபடியாகும் விலையிலான விருப்பத்தெரிவுகளை அதிகரிக்கவும் செய்யும்.

ஆன்லைன் கருத்தாய்வு ஒன்றின் வழியாக தங்கள் கருத்துக்களை இங்கு பகிர்வதற்கு, குடியிருப்புவாசிகள் வரவேற்கப்படுகிறார்கள்.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca